செ.வெ.எண்: 512 நாள்: 16.08.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா பாதித்த பகுதிகளில் விதிமுறைகளை மேலும் கடுமையாக்க உத்தரவு.**

**மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றை குறைக்க தீவிர நடவடிக்கை.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (16.08.2020) புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்ட அரங்கில் சுகாதாரத்துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கோவிட் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகம் முழுவதும் கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தொடர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு துறை அலுவலர்களுடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் கொரோனா நோய் தொற்று எண்ணிக்கை, நோய் பரவும் முறைகள், கொரோனா சிகிச்சை, குணமடைந்தவர்கள் விவரம், தற்பொழுது உள்ள படுக்கைகள் எண்ணிக்கை மற்றும் கூடுதல் படுக்கைகள் விவரம் போன்ற பல்வேறு தகவல்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் கிருமிநாசினி அடித்தல், பிளிச்சிங் பவுடர் தெளித்தல், தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுதல், பொதுமக்களிடையே கொரோனா குறித்த விழிப்புணர்வை துண்டு பிரசுரங்கள், ஆட்டோ விளம்பரங்கள் மூலம் ஏற்படுத்துதல், மருத்துவத்துறையின் சார்பில் தினமும் மேற்கொள்ளப்படும் மருத்துவ முகாம்கள் குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றை தடுக்கும் வகையில் அதிக அளவு மருத்துவ முகாம்கள் நடத்தவும், தொடர்ந்து கொரோனா பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், இதேபோன்று காய்ச்சல், இருமல் போன்ற பல்வேறு கொரோனா அறிகுறி உள்ளவர்களை கண்டறிந்து தவறாமல் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் கொரோனா பாதித்து கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் விதிமுறைகளை மிகவும் கடுமையாக அமல்படுத்தவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனாவை கட்டுப்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் போதிய ஒத்துழைப்பு நல்க வேண்டும். மேலும் கொரோனா தடுப்பு பணிகளில் அரசு அலுவலர்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதுடன், மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றின் எண்ணிக்கையை இனிவரும் காலங்களில் குறைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் திருமதி.மு.பூவதி, ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.மரிய லூயிஸ் பெக்கி ஹோம்ஸ், பொதுசுகாதார துணை இயக்குநர்கள் மரு.அர்ஜுன்குமார், மரு.கலைவாணி உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**